## Basic Tamil Notes Part 5

**பொருள் கூறுக.**

| | |
|---|---|
| எண்ணில் - எண்ணத்தில் | கருணை - அருள்சக்தி |
| பண் - இசை | ஆர்வலர் - அன்புள்ளவர் |
| புன்கண்நீர் - சிறிதளவு கண்ணீர் | பூசல்தரும் - வெளிப்படுத்தும். |
| இயைந்த - பொருந்திய | வழக்கு - முறைமை |
| ஆருயிர் - பெறுவதற்கு அரிய உயிர் | ஈனும் - தரும் |
| நண்பு - நட்பு | நாடா - அளவு இல்லாத |
| வையம் - உலகம் | எய்தும் - அடையும் |
| சிறப்பு - மேன்மை | மறத்திற்கு - மறத்தை(பாவத்தை) நீக்குவதற்கு |
| சார்பு - துணை | அகம் - மனம் |
| வன்பாற்கண் - வலிய பாலை நிலத்தில் | வற்றல் - ஈரம் வற்றிய |
| தளிர்த்தற்று - தளிர்த்த்து போலாகும் | யாக்கை - உடம்பு |
| மனை - வீடு | தகைசால் - நல்ல குணங்கள் |
| மடவார் - பெண்கள் | மனக்கினிய - மனத்துக்கு இனிமையான |
| புதல்வர் - பிள்ளைகள் | காதல் - அன்பு |
| படிறு - வஞ்சம் | அமர் - விருப்பம் |
| விளக்கம் - ஒளி | ஓதின் - கூறுமிடத்து |
| புகழ்சால் - புகழ் நிரம்பிய | உணர்வு - அறிவு |
| இன்சொல் - இனிமையான சொல் | ஈரம் - அன்பு |
| அளைஇ - கலந்து | படிறு - வஞ்சனை |
| செம்பொருள் - அறம் | அகனமர்ந்து - மனம் மகிழ்ந்து |
| முகனமர்ந்து - முகம் மலர்ந்து | துவ்வாமை - வறுமை |
| ஈதல் - ஒருவருக்கு ஒரு பொருள் கொடுத்தல் | அணி - அணிகலன் |
| இன்புறூஉம் - இன்பத்தை மிகுதிப்படுத்தும் | |
| துன்புறூஉம் - துன்பத்தை மிகுதிப்படுத்தும் | பணிவு - கீழ்ப்படிதல் |

ஒருவற்கு - ஒருவனுக்கு

நல்லவை - நன்மை தரும் சொற்கள்

அல்லவை - நன்மை தாராச் சொற்கள்

தலைப்பிரியா - நீங்காத

புன்மை - அற்பம்

இம்மை -இப்பிறப்பு

உளஆக - அமைந்திருக்க

கவர்ந்தது - புசித்தது

நாடி - ஆராய்ந்து

ஈன்று - கொடுத்து

தேய - குறைய

நயன் - நன்மை

மறுமை - வருகின்ற பிறப்பு

வன்சொல் - கடுமையான சொல்

கூறல் - சொல்லுதல்

அற்று - போன்றது

**பிரித்து எழுதுக.**

புன்கண் - புன்மை + கண்

தமக்குரியர் - தமக்கு + உரியர்

ஆருயிர் - அருமை + உயிர்

இன்புற்றார் - இன்பு + உற்றார்

அன்பிலதனை - அன்பு +இலதனை

அன்பகத்து - அன்பு + அகத்து

புறத்துறுப்பு - புறம் + அத்து + உறுப்பு

அகத்துறுப்பு - அகம் + அத்து + உறுப்பு

புகலிடம் - புகல் + இடம்

செம்பொருள் - செம்மை + பொருள்

முகனமர்ந்து - முகன் + அமர்ந்து

துன்புறூஉம் - துன்பு + உறூஉம்

பணிவுடையன் - பணிவு + உடையன்

அணியல்ல - அணி + அல்ல

உளவாக - உள + ஆக

அன்பிலார் - அன்பு + இலார்

அன்புடையார் -அன்பு + உடையார்

அன்புற்று - அன்பு + உற்று

என்பிலதனை - என்பு +இலதனை

வன்பாற்கண் - வன்மை+பால் + கண்

தளிர்த்தற்று - தளிர்த்து + அற்று

அன்பிலவர்க்கு -அன்பு + இலவர்க்கு

அஃதிலார்க்கு - அஃது + இலார்க்கு

ஈராயிரம் - இரண்டு + ஆயிரம்

அகனமர்ந்து - அகன் + அமர்ந்து

அமர்ந்தினிது - அமர்ந்து + இனிது

இன்புறூஉம் - இன்பு + உறூஉம்

ஒருவற்கு - ஒருவன் + கு

இனிதீன்றல் - இனிது + ஈன்றல்

கவர்ந்தற்று - கவர்ந்தது+ அற்று

**சேர்த்து எழுதுக.**

அன்பிற்கும் + உண்டோ - அன்பிற்குமுண்டோ

படிறு + இலவாம் - படிறிலவாம்

கண் + நீர் - கண்ணீர்

நயன் + ஈன்று - நயனீன்று

பயன் + ஈன்று - பயனீன்று

என்பும் + உரியர் - என்புமுரியர்

அன்பு + ஈனும் - அன்பீனும்

அன்போடு + இயைந்த - அன்போடியைந்த

அது + ஈனும் - அதுவீனும்

ஆர்வம் + உடைமை - ஆர்வமுடைமை

சார்பு + என்ப - சார்பென்ப

அன்புற்று + அமர்ந்த - அன்புற்றமர்ந்த

எய்தும் + சிறப்பு - எய்துஞ்சிறப்பு

அன்பகத்து + இல்லா - அன்பகத்தில்லா

**எதிர்ச்சொல் அறிக.**

உண்டு x இல்லை

அடைக்கும் x திறக்கும்

தமக்குx பிறர்க்கு

நண்பு x பகை

இன்புற்றார் x துன்புற்றார்

அறம் x மறம்

அகம் x புறம்

வற்றல் x தளிர்த்தல்

மகிழ்ச்சி x துக்கம்

எழும் x தாழும்

விரியும் x சுருங்கும்

நண்பன் x பகைவன்

நிறைய x குறைய

காலை x மாலை

புதல்வர் x புதல்வியர்

புகழ் x இகழ்

இன்சொல் x வன்சொல்

அகம் x புறம்

அறம் x மறம்

துன்பம் x இன்பம்

அல்லவை x நல்லவை

தேய x வளர

நாடி(விரும்பி) x வெறுத்து

சிறுமை x பெருமை

இனிய x இன்னாத

கனி x காய்

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இராமலிங்க அடிகளார் ________ என்னும் ஊரில் பிறந்தார்.

விடை: மருதூர்

2. இராமலிங்க அடிகளாரது பாடல்கள் ________என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன.

விடை: திருவருட்பா

3. திருக்குறளை இயற்றியவர் ________

விடை: திருவள்ளுவர்

4. திருக்குறள் _________ பிரிவுகளைக் கொண்டது.

விடை: முப்பெரும்

5. திருக்குறள் _______ எனப் போற்றப்படுகிறது.

விடை: உலகப் பொதுமறை

6. திருநெல்வேலி மாவட்ட்த்திலுள்ள _________ என்னும் சிற்றூரில் பறவைகள் புகலிடம் உள்ளது.

விடை: கூந்தன்குளம்

7. உலகம் முழுவதிலும் இருந்து பலநாட்டுப் பறவைகள் வந்து தங்கியிருக்கும் இடத்துக்குப் பெயர் ________

விடை: பறவைகள் புகலிடம்

8. வெயில் சுட்டெரிக்கும் காலத்தைக் __________காலம் என்கிறோம்.

விடை: கோடைக்

9. மனிதர்களின் நல்ல நண்பன் ________ ஆகும்.

விடை: பறவை

10. நான்மணிக்கடிகை _______ நூல்களுள் ஒன்று.

விடை: பதினென்கீழ்க்கணக்கு

11. நான்மணிக்கடிகை நூலின் ஆசிரியர் _______

விடை: விளம்பிநாகனார்

12. மனைக்கு விளக்கம் _________

விடை: பெண்கள்

13. அன்புமிக்க புதல்வர்களுக்கு விளக்கு _____

விடை: அறிவு

14. மக்கள் கவிஞர் என அழைக்கப்படுபவர் _________

விடை: பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம்

15. இன்றைய கந்தானத்துக்கு அன்றே எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்தவர்__________

விடை: கண்ணப்பர்

**சொற்றொடரில் காணும் பிழையைத் திருத்துக.**

**அ. அவன் படித்தது.**

விடை: அவன் படித்தான்.

**ஆ. அவள் பாடினான்**

விடை: அவள் பாடினாள்.

**கீழுள்ள தொடர்களில் இடம்பெற்றுள்ள சொற்களுள் நட்பெழுத்துகளை அடிக்கோடு இடுக.**

**அ. கியூரி அம்மையாரின் குடும்பம் வறுமையுடன் இருந்தது.**

விடை: குடும்பம் இருந்தது.

**ஆ. கியூரி அம்மையார் தம் கண்டுபிடிப்பை அறிவியல் உலகுக்குக் கொடையாக வழங்கினார்.**

விடை: கண்டுபிடிப்பை, வழங்கினார்

**கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

1. திருக்குறளில் _________ அதிகாரங்கள் உள்ளன.

அ. 233 ஆ. 1333 இ. 133

விடை: 133

2. திருக்குறள் __________ நூல்களுள் ஒன்று.

அ. பத்துப்பாட்டு ஆ. பதினென்கீழ்க்கணக்கு இ. எட்டுத்தொகை

விடை: பதினென்கீழ்க்கணக்கு

3. பழவேற்காடு என்னும் சிற்றூர் அமைந்துள்ள மாவட்டம்_________

அ. காஞ்சிபுரம் ஆ. திருவள்ளூர் இ. திருநெல்வேலி

விடை: திருவள்ளூர்

4. சமவெளி மரங்களில் வாழும் பறவை _____

அ. ஊசிவால் வாத்து ஆ. பூமன் ஆந்தை இ. மஞ்சள் சிட்டு

விடை: மஞ்சள் சிட்டு

5. நீர்நிலைகளில் வாழும் பறவை ________

அ. நாரை ஆ. தூக்கணாங்குருவி இ. இருவாச்சி

விடை: நாரை

6. கடிகை என்பதன் பொருள் ______

அ. கடித்தல் ஆ. அணிகலன் இ. கடுகு

விடை: அணிகலன்

7. விளம்பி என்பது ________ பெயர்.

அ. இயற்பெயர் ஆ. புனைபெயர் இ. ஊர்ப்பெயர்

விடை: ஊர்ப்பெயர்

8. கடலில் எதுவாக இருத்தல் வேண்டும் என்று தாராபாரதி கூறுகிறார்?

அ. துளி ஆ. முத்து இ. மீன்

விடை: முத்து

9. நடுவெண் அரசு முத்துராமலிங்கருடைய அஞ்சல் தலையை வெளியிட்ட ஆண்டு.

அ. 1990 ஆ. 1939 இ. 1995

விடை: 1995

10. நீதி தேவதையால் தண்டிக்கப்பட்டவர்

அ. முடவர் ஆ.ஊர்த்தலைவர் இ. பார்வையற்றவர்

விடை:ஊர்த்தலைவர்

**கீழ்க்காணும் தொடர்களில் உள்ள வினா எழுத்துகளை எடுத்து எழுதுக.**

1. மேடாய் இருந்தால் என்ன?

விடை: எ

2. நல்லாசிரியர் விருது பெற்ற கவிஞர் யார்?

விடை: யா

3. சுபாஷ் சந்திரபோஸ் வருகை தந்த ஊர் எது?

விடை: எ

4. நீதி தேவதையின் தீர்ப்பு சரியா?

விடை: ஆ

**விடுபட்ட சீர்களை நிரப்புக.**

1. அன்பிலார் எல்லாம் __________ அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு.

விடை: தமக்குரியர்

2. என்பி லதனை வெயில்போலக் காயுமே

அன்பி லதனை __________

விடை: அறம்

**உரிய சொற்களைத் தேர்ந்தெடுத்துச் சொற்றொடரை நிரப்புங்கள்.**

1. மல்லிகை __________ வீசியது. (மனம், மணம்)

விடை: மல்லிகை **மணம்** வீசியது.

2. பூமியை _________ வருவேன். (வலம், வளம்)

விடை: பூமியை **வலம்** வருவேன்.

3. __________ பதுங்கிப் பாயும். (புலி, புளி)

விடை: **புலி** பதுங்கிப் பாயும்.

4. முகத்தில் _________ முறுவல் வேண்டும். (புன் , புண்)

விடை: முகத்தில் **புன்**முறுவல் வேண்டும்.

5. நாய் __________ நிமிராது. (வால், வாள்)

விடை: நாய் **வால்** நிமிராது.

**ஓரிரு சொற்களில் விடையை எழுதுக.**

**அ. ஔவையார் பாடலில் அவல் என்பதன் பொருள் என்ன?**

விடை: பள்ளம்

**ஆ. ஔவையார் பாடல் இடம் பெற்ற நூலின் பெயர் என்ன?**

விடை: புறநானூறு

**இ. மூன்று சுட்டெழுத்துகளுள் இன்றுநாம் பயன்படுத்தாத சுட்டெழுத்து எது?**

விடை: ‘உ’ என்பதாகும்.

**ஈ. சொல்லுக்கு அழுத்தம் தரும் உயிரெழுத்து எது?**

விடை: ‘ஏ’ என்பதாகும்.

**உ. அழைத்தால் நீதி தேவதை வரும் என்பது நம்பிக்கையா, உண்மையா?**

விடை: நம்பிக்கை

**ஊ. முத்துராமலிங்கர் பிறந்த ஊர் எது?**

விடை: பசும்பொன் என்னும் ஊர்.

1. தமிழ்த்தாத்தா - உ. வே.சா
2. உ. வே.சா. அவர்களின் இயற்பெயர் - வேங்கடரத்தினம்
3. உ.வே.சா. அவர்களின் ஆசிரியர் பெயர் - மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்
4. உ.வே.சா. அவர்களுக்கு அவர் ஆசிரியர் இட்ட பெயர் - சாமிநாதன்

**எவற்றை மயங்கொலிப்பிழைகள் என்பர்.**

ர,ற ; ல, ள, ழ ; ந, ண, ன - இவற்றைப் பலர் முறையாய் ஒலிக்கப் பழகவில்லை ; அதனால், தவறாய் உச்சரிக்கின்றனர் ; தவறாய் எழுதுகின்றனர். இவற்றையே மயங்கொலிப்பிழைகள் என்பர்.

**பின்வருவனவற்றுள் உள்ள பிழையான சொற்களைத் திருத்தி எழுதுக.**

| **பிழையானவை** | | **சரியானவை** |
|---|---|---|
| கிணரில் போட்டேன் | - | கிணற்றில் போட்டேன் |
| சுவற்றில் வரைந்தேன் | - | சுவரில் வரைந்தேன். |
| வயிர் பசிக்கிறது | - | வயிறு பசிக்கிறது. |

**பொருத்துக.**

1.

ஔவையார் - தேசியம் காத்த செம்மல்

தாராபாரதி - புறநானூறு

முத்துராமலிங்கர்   - திண்ணையை இடுத்துத் தெருவாக்கு.

**விடை:**

ஔவையார் - புறநானூறு

தாராபாரதி   - திண்ணையை இடுத்துத் தெருவாக்கு

முத்துராமலிங்கர்   - தேசியம் காத்த செம்மல்.